உ

சிவமயம்

# தட்சிணாமூர்த்தி தத்துவமும் தோத்திரமும்

தொகுத்தவர்:
பல்கலைப் புலவர்
க. சி. குலரத்தினம்

வெளியிடுவோர்:
சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல்
திரு. க. கனகராசா அவர்கள்
(மில்க்வைற் தொழிலதிபர்)
திருஆலவாய்,
யாழ்ப்பாணம்.

1978

வாசிப்பதால் மனிதன் பூரணமடைகிறன்
කියවීමෙන් මිනිසෙකු සම්පූර්ණ කෙරේ
READING MAKES A MAN PERFECT

By Courtesy MILK WHITE SOAP WORKS, Jaffna (Ceylon)

இப்புத்தகத்தை வாசித்தபின்னர்
தயவுசெய்து பிறருக்குங்
கொடுத்து உதவுங்கள்.



உ

சிவமயம்

# தட்சிணாமூர்த்தி தத்துவமும் தோத்திரமும்

**
**

தொகுத்தவர்:
''பல்கலைப்புலவர்''
க. சி. குலரத்தினம்

**
**

வெளியிடுவோர்:
சிவநெறிப்புரவலர், சிவதர்மவள்ளல்
திரு. க. கனகராசா அவர்கள்
(மில்க்வைற் தொழிலதிபர்)
திருஆலவாய், யாழ்ப்பாணம்.
1978.

# வியாழன் மாற்றம்

தேவர்களுக்கெல்லாம் குருவாகிய வியாழ பகவானுக்குப் பிரகஸ்பதி என்னும் திருநாமம் உண்டு. பிரகஸ்பதி அறிவிற் சிறந்தவர். பொன்வண்ண மேனியர். கமண்டலம், அட்சமாலை, யோகதண்டம், அபயம் என்பனவற்றை நான்கு திருக்கரங்களில் தாங்கியவர். அவர் சாந்தமூர்த்தி. தூய்மைக்கு இருப்பிடமானவர்.

வியாழபகவான் தநுர் ராசிக்கும், மீன ராசிக்கும் தலைவர். மிக்க வலிமையுள்ளவர், சர்வ வியாபகர், வாக்குக்கு அதிபதி. இந்திரன் முதலிய இறையவரும் அவரை வழிபடுவர். அவர் ஏழைகளுக்கு இரங்குபவர். கருணைக் கடல். களங்கமற்றவர்.

இத்தகைய வியாழ பகவானின் இட மாற்றத்தால் நலிவு மெலிவுகளின் தாக்கத்தை ஒருவாறு சாந்தப் படுத்துவதற்குத் தட்சிணாமூர்த்தி வழிபாடு நல்லது என்று வெள்ளவத்தை திரு. அ. அருளானந்தம் அவர்கள் இத்தகைய ஒரு கைநூல் வழிபாட்டுக்கு உதவியாகும் என்று எம்மை ஊக்கப்படுத்தினார். இதனை எங்கள் மில்க்வைற் செய்தி ஆசிரியர் தொகுத்துதவினார். நாம் எல்லோரும் இதனைப் படித்து வழிபட்டு நல்வாழ்வு பெறுவோமாக.

"திருஆலவாய்",
தபாற்பெட்டி 77,
யாழ்ப்பாணம். 10-7-78.

க. கனகராசா
மில்க்வைற் தொழிலதிபர்

உ
சிவமயம்

சிவபெருமானைவிட மேலான தெய்வம் இல்லை, சைவசமயத்தைவிட மேலான சமயம் இல்லை, நமச்சிவாய மந்திரத்தைவிட மேலான மந்திரம் இல்லை, திருக்கோயில் வழிபாட்டைவிட மேலான வழிபாடு இல்லை, பன்னிரு திருமுறைகளுக்கு மேலான தோத்திரப் பாடல்கள் இல்லை, திருநீற்றிலும் மேலான சிவசின்னம் இல்லை என்று கண்டு எம் முன்னோர் பெருநெறியில் ஒழுகி வந்தார்கள்.

ஆன்மாக்களாய நாமெல்லோமும் உய்தற் பொருட்டுச் சிவபெருமான் கொண்டருளுகின்ற அற்புதத் திருமேனிகளில் தட்சிணாமூர்த்தமும் ஒன்று. இது அவர் கொண்டருளும் யோக வடிவம். அவர் தெற்கு நோக்கி எழுந்தருளும் வடிவத்தைத் தென்முகச் சிவமெனவும், தென் முகக் கடவுள் எனவும் நாவாரத் துதித்து வணங்குவர்.

திருக்கைலாயத்தின் தென் புறத்திலுள்ள கல்லால மரநிழலில் மௌன நிலையில் எழுந்தருளியிருந்துகொண்டே மானசீகமாக மாணவர்களாகிய மகா முனிவர்களுக்கு மறைகளின் முடிந்த பொருளை எடுத்துச் சொன்னவர் தட்சிணாமூர்த்தி.

சனகர், சனந்தனர், சனாதனர், சனத்குமாரர் என்னும் நான்கு முனிவர்களுக்கும் சிவபெருமான் அறம் பொருள் இன்பம் வீடு என்னும் உறுதிப் பொருளுரைத்த பெருமையைத் திருமுறைகளும் புராணங்களும் அருமையாகப் போற்றுகின்றன.

"அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம் பொருள் இன்பம் வீடு மொழிந்த வாயான் முக்கண் ஆதி" என்று திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரும், "ஆலமர நீழல் அறஞ்சொன்னாய் போற்றி" என்று திருநாவுக்கரசு நாயனாரும், "அருந்தவ மாமுனிவர்க் கருளாகியோர் ஆல தன்கீழ் இருந்தறமே புரிதற்கியல்பாகிய

தென்னை கொலாம்" என்று சுந்தரமூர்த்திநாயனாரும், "அருந்தவர்க்கு ஆலின் கீழ் அறம் முதலா நான்கினையும் இருந்தவருக்கு அருளுமது எனக்கறிய இயம்பேடீ" என்று மாணிக்கவாசக சுவாமிகளும் அருளியுள்ளார்கள்.

தர்மம் அர்த்தம் காமம் மோட்சம் என்பனவாகிய அறம் பொருள் இன்பம் வீடு எம்மவர்க்கு உறுதி பயப்பதற்காகவே அன்று சிவபெருமான் முனிவர்களுக்கு உரைத்தருளினர் என்பர்.

தட்சிணாமூர்த்தத்திலிருந்து திருக்கைலாய ஞானம் தேவ பரம்பரையாகவும் பூத பரம்பரையாகவும் பரவியுள்ளது. தட்சிணாமூர்த்தத் திருவுருவங்களைச் சிவாலயங்களின் விமானங்களில் தென் திசையிற் காணலாம். அங்கே மேதா ஞானத்தை அருளிய அமைப்பில் மேதா தட்சிணாமூர்த்தி, யோகமுணர்த்திய முறையில் யோக தட்சிணாமூர்த்தி, வீணையைக்கொண்டு சாமகானஞ் செய்துணர்த்திய வீணாதட்சிணாமூர்த்தி முதலிய திருவுருவங்கள் உள்ளன.

சைவசமயத்து முதலாசிரியர் கல்லால் மர நிழலமர்ந்த தட்சிணாமூர்த்தியேயாவர். அவர் பரமாசாரிய மூர்த்தி. அவருக்கு மேற்பட்ட ஆசாரிய மூர்த்திகள் இன்மையில் அவர் பரமா சாரியமூர்த்தியாயினர். அவர் எல்லோர்க்கும் மூதற் குருவாய் மெய்ஞ்ஞான முத்திரையைத் திருக் கையில் மலர்த்தியருளி உருவழகும் குறு நகையும் கொண்ட சிவனாராவர்.

அவர் காட்டியருளும் மெய்ஞ்ஞான முத் திரை, சின் முத்திரை எனவும், மோனமுத்திரை எனவும் வழங்கும். அவரின் வலத் திருக்கரத்தில் சின் முத்திரையும் இடத் திருக்கரத்தில் புத்தக மும் இருக்கின்றன. இன்னும் மணிவடம், கமண் டலம், தாமரை மலர், அக்கினி, மான், மழு என்பனவும் இத் திருக்கோலத்தை அழகு செய் வன. ஞானவடிவெனப் புகழப்பெறும் இத் திரு வடிவு தாயுமானசுவாமிகளை வெகுவாகக் கவர்ந் துள்ளது. தென்முகத்தின் முகமாய் இருந்த கொலு எம் முகத்திலும் வணங்குவேன் என்று

அவர் அருளியுள்ளார். சின் மயானந்த குரு வணக்கம் தட்சிணமூர்த்தி வணக்கமாகும்.

திருச்சிராப்பள்ளியில் எழுந்தருளியுள்ள தென்முகக் கடவுளை வழிபட்ட தாயுமான சுவாமி கள் அவரைச் சித்தாந்த முத்தி முதலே என்று போற்றுகிறார். அவரைச் சின்மயானந்த குருவே எனத் தொழுகின்றார். அவருக்கு உபதேசித் தவர் நந்தி மரபில் வந்த மௌன குரு என்பவ ராவர். சிவபெருமான் உலகங்கள் எல்லாம் அழிந்தபின்பும், மாயையின் காரியங்கள் யாவும் நீங்கிய பின்பும் நிலைபெற்றிருப்பவர். அவர் வீணை வாசித்துக்கொண்டிருப்பவர் என்று திரு நாவுக்கரசு நாயனார் பாடியருளியுள்ளார்.

❀

உ
சிவமயம்

# தட்சிணாமூர்த்தத் தத்துவார்த்தம்

"கல்லாலின் புடையமர்ந்து நான் மறையா
றங்கமுதற் கற்ற கேள்வி
வல்லார்கள் நால்வருக்கும் வாக்கிறந்த
பூரணமாய் மறைக்கப் பாலாய்
எல்லாமாய் அல்லதுமாய் இருந்ததனை
யிருந்தபடி யிருந்துகாட்டிச்
சொல்லாமற் சொன்னவரை நினையாமல்
நினைந்துபவத் தொடக்கை வெல்வாம்."
பரஞ்சோதி முனிவர் — திருவிளையாடற்புராணம்

சிவபெருமான் கல்லால் நீழலில் தென்முக மாக எழுந்தருளியிருந்து, நான்கு வேதங்களை யும், ஆறு அங்கங்களையும் நன்கறிந்த வல்லவர் களாகிய முனிவர் நால்வருக்கும், வேத வேதாங் கங்களினால் தம்மையும் தலைவனையும் சந்தேக விபரீதமற உணரமாட்டாது மயங்கின மயக்கம்

நீங்குதற்பொருட்டு, வாக்கினால் இத்தன்மைத் தென்று சொல்லக்கூடாத பூரணமாயும், வேதங்களினால் அறுதியிட்டுக் கூறமுடியாததாயும், உயிர்ப் பொருள் உயிரில் பொருளாகிய எல்லாம் தன்னையின்றித் தனித்து நில்லாமையால் அவை யாவும் தானாகியும் அப்பொருள்களுக்கு வேறாயும் இருந்த தமது சொரூபத்தை இருந்தவாறே திருமேனி கொண்டருளிய முறைமையில் வைத்துக் காட்டி, அவ்வுண்மையை, வாக்காற் சொல்லாது அறிவுக் கறிவாய் நின்று அருளால் அறிவித்தனர். இப்பேருபகாரம் புரிந்த தட்சிணாமூர்த்தியை நாம் ஆராய்ச்சி அறிவாகிய மனத்தால் நினையாது அநுபவ அறிவால் அறிந்து பிறந்திறந் துழலுந் துன்பத்தை வெல்வாம் என்றவாறு.

இனி வேதத்துக்குப் பொருளருளிச் செய்த போது போதனைய தட்சிணாமூர்த்தி எழுந்தருளியிருந்த திருக்கோலத்தைப் பரஞ்சோதி முனிவர் பாடியருளும் முறையிற் படிப்போம்.

“ சீதளப் பளிக்கு மேனியும் பளிக்குச்
செழுமலை பதித்ததுப் பன்ன
பாதமுஞ் செவ்வாய் மலருமுக் கண்ணும்
பங்கயச் செங்கர நான்கும்
வேதபுத் தகமு மமுதகும் பமுந்தன்
விழிமணி வடமுமெய்ஞ் ஞான
போதமுத் திரையுந் தரித்ததோர் தனிமைப்
போதன்முன் ருழ்ந்தெழுந் தேத்தா ”

தட்சிணுமூர்த்தத்தில் முயலகனை மிதித்த திருவடியும் வீராசனமான மற்ருெரு திருவடியும், சின்முத்திரையும், உருத்திராக்கமும் அமுத கும்பமும் சிவஞான போதமும் அமையும் என்பர்.

சின் முத்திரையே தட்சிணுமூர்த்தத்தின் சிறப்பான அம்சம். திருக்கரத்திலுள்ள ஐந்து விரல்களுள் நடுவிரல் முதலாகப் பின் மூன்று விரல்களை வேறு பிரித்து, சுட்டுவிரலைப் பெரு விரல் அடிப்பாகத்தில் அடங்கும்படி மடக்கி வைத்தலே சிறப்பாகும்.

பெருவிரல்: ஏனைய நான்கு விரல்களோடுங் கூடித் தனித்தனி ஒவ்வொரு விரலையும் பொருந்துவதற்கு உரிமையுடையதாயும், அவற்றின் வேறுமாயும் இருத்தலால் அது எல்லாமாயும் அல்லதுமாயும் நின்ற பதியைக் குறிக்கும்.

சுட்டுவிரல்: பெருவிரலை உள்ளடக்கியும் நடுவிரலுக்கு உள்ளடங்கியும் இருத்தலால், அது ஆணவத்தினுள்ளடங்கிப் பதியைக் கீழ்ப்படுத்திப் பசுபோதமாய் நிற்கும் உயிரைக் குறிக்கும்.

நடுவிரல்: பெருவிரலோடு பிரிப்பின்றி நிற்கும் சுட்டுவிரலைத் தன்னுள் அடக்கிநிற்றலால், அது பதியோடு பிரிப்பின்றி நிற்கும் உயிரைத் தன்னுள் அடக்கிவைத்திருக்கும் ஆணவ மலத்தைக் குறிக்கும்.

அணிவிரல்: நடுவிரலுக்குட்பட்டு இருத்தலால், அது ஆணவமலச் சேட்டையால் அனாதியே உண்டான விருப்பு வெறுப்பென்னும் மூல கன்மத்தைக் குறிக்கும்.

**கடைவிரல்:** அணிவிரலுக்கு உட்பட்டும் முற்பட்டும் இருத்தலால் அது விருப்பு வெறுப்புக்கு உட்பட்டும் முற்பட்டும் விளங்கும் மாயா காரியங்களைக் குறிக்கும்.

ஆகவே ஆணவம் கன்மம் மாயையென்னும் மும்மலங்களும் நீங்க, உயிர் சிவபெருமான் திருவடிவியாபகத்துள் இரண்டறக் கலந்து நிற்றலை உணர்த்துவது சின் முத்திரை என்பர்.

**அமுத கும்பம்:** மல நீக்கமும், திருவடியடைதலாகிய சிவப்பேறும் வாய்ப்பதற்குச் சாதனம் சிவஞானம் என்பதை உணர்த்துவது.

**உத்திராக்க மணிவடம்:** பாசஞான பசுஞானங்களில் நின்றும் நீங்கிச் சிவஞானத்தில் பயிலுங் காலத்தும் பழைய பழக்க வாசனையால் பாசக் கூட்டங்களைப் பற்ற நேரும். இங்ஙனம் நேருங்கால், அவற்றிற் செல்லாது சிவஞானத்தில் நிலைத்தற் பொருட்டுத் திருவைந்தெழுத்தைக் கணிக்கவேண்டுமென்பதை உணர்த்துவது.

முயலகனை மிதித்த திருவடி: சிவஞானப்பேறு பெற்ற சிவஞானிகள் தேகமுள்ள அளவும் சீவன் முத்தராய் வாழ்வர், வாழுங்காலத்து அற்றம் பார்த்து ஆணவமலம் தலையெடுக்காவண்ணம் அதனை அமிழ்த்துவதற்குரிய சாதனஞ்செய்து வரல் வேண்டும் என்பதையும் வருவரென்பதையும் உணர்த்துவதாகும்.

வீராசனம்: சீவன் முத்தர் மலநீக்கத்துக்குரிய சாதனம் செய்துவருதலோடு மலநீங்கிய சிவனடியார்களோடு சிநேகம் செய்தல் வேண்டும் என்பதையும், சிவபக்தரல்லாதாரோடு இணங்காது வீரமாய் இருக்கவேண்டும் என்பதையும் உணர்த்துவது. வீராசனம் சிவபக்தரல்லாதாரைப் பொருட்படுத்தாமையினையும் குறிக்கும்.

சிவஞானபோதம்: இறைவன் திருக்கரங்களினுலும் திருவடிகளினுலும் உணர்த்தும் உண்மைப் பொருளை ஒருசேரத் தொகுத்து, எந்தச் சமயத்தில் யார் யாருக்கு எதனை அறிவிக்கவேண்டுமோ அதனை அறிவிக்கும் ஞான நூலாகும்.

கல்லால் நிழல்: சாதனஞ் செய்யுங்காலத்தும், சிவானுபவம் கைவரப்பெற்றுச் சீவன் முத்தராய் வாழுங்காலத்தும், மனத்திற்கும் சரீரத்திற்கும் விருப்பு வெறுப்பு முதலிய வெப்பந் தருகின்ற இராசத தாமத குணங்களைச் சாராது, சாந்தத்தைத் தருகின்ற சத்துவகுணத்தைச் சார்ந்திருத்தல் வேண்டுமென்பதை உணர்த்துவது. இறைவன் படைப்பில் நாமெல்லோமும் சின்னஞ்சிறிய வஸ்துக்கள் என்று காட்டுவது ஆலமரம்.

தென்முகம் என்பது அகோர முகமாகும். அது கோரமில்லாதது. அது அநுக்கிரகத்தை உணர்த்துவது.

## பிரார்த்தனை

ஓம் என்னும் பிரணவத்தின்மூலம் அடையப் பெறுபவரும், நிறைஞானமூர்த்தியும், மாசற்றவரும், அமைதியுற்றவருமாகிய ஸ்ரீ தட்சிணாமூர்த்திக்கு வணக்கம்!

திருஞானசம்பந்தமூர்த்திநாயனுர் அருளிய

## தேவாரம்

திருச்சேய்ஞலூர் — பண் - பழந்தக்கராகம்

திருச்சிற்றம்பலம்

நூலடைந்த கொள்கையாலே
நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர் கேட்க
நல்கிய நல்லறத்தை
ஆலடைந்த நீழல் மேவி
அருமறை சொன்ன தென்னே
சேலடைந்த தண்கழனிச்
சேய்ஞலூர் மேயவனே.

திருநாவுக்கரசுநாயனுர் அருளிய

## தேவாரம்

திருப்பழனம் — திருநேரிசை

ஆலின்கீழ் அறங்கள் எல்லாம்
அன்றவர்க் கருளிச் செய்து
நூலின்கீ ழவர்கட் கெல்லாம்
நுண்பொரு ளாகிநின்று

காலின்கீழ்க் காலன் தன்னைக்
கடுகத்தான் பாய்ந்து பின்னும்
பாலின்கீழ் நெய்யுமானார்
பழனத்தெம் பரமனாரே,

சுந்தரமூர்த்திநாயனார் அருளிய
## தேவாரம்

திருக்கடவூர் — பண் - நட்டராகம்

அன்றாலின் நிழற்கீழ்
அறம் நால்வர்க் கருள்புரிந்து
கொன்றாய் காலனுயிர்
கொடுத்தாய்மறை யோனுக்குமான்
கன்றாருங் கரவா
கடவூர்த்திரு வீரட்டத்துள்
என்தா தைபெருமான்
எனக்கார்துணை நீயலதே.

மாணிக்கவாசக சுவாமிகள் தில்லையில் அருளிய

## திருவாசகம்

மாயாவிசய நீக்குதல்

அன்றால நீழற்கீழ் அருமறைகள் தானருளி
நன்றாக வானவர் மாமுனிவர் நாள்தோறும்
நின்றார ஏத்தும் நிறைகழலோன் புனைகொன்றைப்
பொன்தாது பாடிநாம் பூவல்லி கொய்யாமோ.

திருமாளிகைத்தேவர் அருளிய

## திருவிசைப்பா

கோயில் — பண் - பஞ்சமம்

திறம்பிய பிறவிச் சிலதெய்வ நெறிக்கே
திகைக்கின்றேன் தனைத்திகை யாமே
நிறம்பொன்னும் மின்னும் நிறைந்தசே வடிக்கீழ்
நிகழ்வித்த நிகரிலா மணியே
அறம்பல திறங்கண் டருந்தவர்க் கரசாய்
ஆலின்கீழ் இருந்தஅம் பலவா
புறஞ்சமண் புத்தர் பொய்கள்கண் டாயைத்
தொண்டனேன் புணருமா புணரே.

சேந்தனார் அருளிய

## திருப்பல்லாண்டு

கோயில் — பண் - பஞ்சமம்

நிட்டையி லாவுடல் நீத்தென்னை யாண்ட
 நிகரிலா வண்ணங்களுஞ்
சிட்டன் சிவனடியாரைச் சீராட்டுந்
 திறங்களுமே சிந்தித்து
அட்டமூர்த்திக் ககம்நெக வூறும்
 அமிர்தினுக்(கு) ஆலநிழற்
பட்டனுக் கென்னைத்தன் பாற்படுத்தானுக்கே
 பல்லாண்டு கூறுதுமே.

## பவானி கூடற் புராணம்

நிறைமதி முகமும் முக்கணும் மூரல்
 நிலவு செவ்வாயும் ஈரிரண்டு
நறைமலர்க் கரமுஞ் செபமணி வடமும்
 ஞானமுத் திரையுமாய் நால்வர்க்
கறநெறி யுணர்த்தி யருள்செய்து கல்லால்
 அணிநிழல் இனிதுவீற் றிருந்த
மறைமுதல் நிடுவி றறியொணு ஞான
 வடிவினைக் கருத்தினில் வைப்பாம்.

தாயுமானசுவாமிகள் அருளிய

## சின்மயானந்த குரு

அங்கையொடு மலர்தூவி யங்கமது புளகிப்ப
வன்பினு லுருகி விழிநீர்
ஆறுக வாராத முத்தியின தாவேச
ஆசைக் கடற்குண் மூழ்கிச்
சங்கர சுயம்புவே சம்புவே யெனவுமொழி
தழுதழுத் திட வணங்குஞ்
சன்மார்க்க நெறியிலாத் துன்மார்க்க னேனையுந்
தண்ணருள் கொடுத்தாள் வையோ.

துங்கமிகு பக்குவச் சனகன்முதன் முனிவோர்க
டொழு தருகில் வீற்றிருப்பச்
சொல்லரிய நெறியையொரு சொல்லா லுணர்த்
சொரூபானு பூதி காட்டிச் [தியே
செங்கமல பீடமேற் கல்லா லடிக்குள்வளர்
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
சின்மயா னந்த குருவே.

ஆக்கையெனு மிடிகரையை மெய்யென்ற பாவிநா
    னத்துவித வாஞ்சை யாதல்
அரியகொம் பிற்றேனை முடவனிச் சித்தபடி
    யாகுமறி வவிழ வின்பந்

தாக்கும்வகை யேதிநாட் சரியைகிரி யாயோக
    சாதனம் விடுத்த தெல்லாஞ்
சன்மார்க்க மல்லவிவை நிற்கவென் மார்க்கங்கள்
    சாராத பேரறி வதாய்

வாக்குமன மணுகாத பூரணப்பொருள் வந்து
    வாய்க்கும் படிக்கு பாயம்
வருவித்து வட்டாத பேரின்ப மானசுக
    வாரியினை வாய் மடுத்துத்

தேக்கித் திளைக்கநீ முன்னிற்ப தென்றுகாண்
    சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்ஷிண மூர்த்தியே
    சின்மயா னந்த குருவே.

சிவஞானதேசிகர் அருளிய

## ஸ்ரீ தட்சிணாமூர்த்தி திருவருட்பா

பூங்கமல வதனமும் பொழிகருணை நயனமும்
புன்முறுவல் நிலவெ றிப்பும்
பொலிசடா வியுடமதில் உறைநிலா மதியும் ஒளி
புனைகுழை யிலங்கு காதும்

தேங்குபர மானந்த சின்மயா காயமாஞ்
சித்தியருண் முத்தி ரையுமேற்
சிவாநுபவ நீங்கினோர் சேரவருள் செபமாலை
சிவஞான புத்த கமுமோர்

வேங்கையத ளுடையும்ச ரற்கால மதிகோடி
வெள்ளமென நிறைவ டிவமும்
மேலான தெய்வநீ யன்றிவே றில்லையிது
மெய்யென் றெடுத்த கனலும்

ஓங்கவட வாலடியில் உறைகின்ற தெய்வமே
உன்னையன்றி வேறு நினையேன்
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே.

பொன்னினை விழுங்குமொரு ரசகுளிகை போலவும்
　　பூதவிருள் தனைவி ழுங்கும்
பூர்ணசந்த் ரோதயம் போலவும் சந்திரன்
　　பொன்னொளி யையும் விழுங்கும்

மன்னும்ஆ யிரக்கோடி சூரியர்கள் போலவும்
　　வல்லிருள் பினைவி ழுங்கும்
மண்டுகனல் போலவும் உப்பினை விழுங்கிடும்
　　வாரிநீ ரைப்போ லவும்

என்னைநீ யுள்விழுங் கிக்கொண் டிருப்பதினி
　　எக்காலம் எக்கால மென்
றேழையேன் அழுதழுது வாடவும் திருவுள்ளம்
　　இன்னமும் இரங்க வில்லையே

உன்னருள் இரங்குநாள் எந்தநாள் ஆலடியில்
　　உறைகின்ற பரதெய் வமே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
　　குயிரான பரம சிவமே.

அண்டர் தொழும் இந்த்ராதி வாழ்வை விரும்பி
அட்டசித் தியும்வி ரும்பேன் [டேன்
அகில கலைஞானமும் விரும்பிடேன் உலகுபுகழ்
அரியகீர்த் தியும்வி ரும்பேன்

பண்டைமலம் எல்லாம் ஒழித்துநின் னருள்பெற்ற
பழையவடி யார்க ளடியார்
பாததா மரைகளென் றலைமேல் வைத்தருட்
பார்வையால் இருள கற்றித்

தொண்டுசெய் தரியபர மானந்த வெள்ளம்
துதைந்துவிளை யாடி யுலகம்
தோன்றுமல் இறுமாந் திருக்கின்ற பெருவாழ்வு
தொண்டனேன் வேண்டி னன்வண்

டுண்டிடுங் கொன்றையணி யண்டர்நா யககயிலை
யுறைகின்ற பர தெய்வமே
ஒன்றாகி யானந்த வுருவாகி யென்னுயிர்க்
குயிரான பரம சிவமே.

திருச்சிற்றம்பலம்.

சுபம்.

"மறைமிகு கலைநூல் வல்லோன்
வானவர்க் கரசன் மந்திரி
நறைசொரி கற்ப கப்பொன்
னாட்டினுக் கதிப னாகி
நிறைதனஞ் சிவிகை மண்ணி
னீடுபோ கத்தை நல்கு
மறையவன் குரு வியாழ
னிருமலர்ப் பாதம் போற்றி."


புதன்
சுக்கிரன்
சந்திரன்
குரு
சூரியன்
செவ்வாய்
கேது
சனி
ராகு

மில்க்வைற் வெளியீடுகள் எவையும்
விலைக்குக் கிடையா.

அவற்றைப் பெறவிரும்புவோர்
மில்க்வைற் தயாரிப்புகளின் மேலுறைகளை
அனுப்பித் தபாற்செலவின்றிப்
பெற்றுக்கொள்ளலாம்.

மில்க்வைற் மேலுறைகள் காசுத்தாள் போலப்
பெறுமதி வாய்ந்தவை.

மேலுறைகளுக்கு
நீங்கள் எம்மிடம் பெறக்கூடியவை:

1. சுவாமிப் படங்கள்
2. துவாய்கள்
3. பொலித்தின் பைகள்
4. சைவசமய வெளியீடுகள்
5. அப்பியாசக் கொப்பிகள்
6. மில்க்வைற் செய்தி இதழ்கள்

**மில்க்வைற் தொழிலகம்**

தபாற்பெட்டி 77, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 7233

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.